விலை ரூபா: 10.00

*Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி

*Valampurii*

பக்கங்கள்: நான்கு

சங்கு 07 வள்ளுவர் ஆண்டு 2037 கார்த்திகை 16 சனிக்கிழமை (02.12.2006) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 338

ராம்கோ MADRAS CEMENTS LTD RAMCO CEMENT RAMCO
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.
ராம்கோ சீமெந்து

# வாகனத் தொடரணியை இலக்குவைத்து

# கொழும்பில் தற்கொலைத் தாக்குதல்

## பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மயிரிழையில் தப்பினார்

### 2 இராணுவத்தினர் பலி; 16 பேர் படுகாயம்

(கொழும்பு)

பாதுகாப்பு அமைச்சின் செயலாளரும் ,ஜனாதிபதியின் சகோதரருமான கோத்தபாய ராஜபக்ஷவை இலக்கு வைத்து நேற்று கொழும்பில் தற்கொலைத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

கோத்தபாய ராஜபக்ஷ சென்று கொண்டிருந்த வாகனத் தொடரணியை இலக்கு வைத்து கொள்ளுப்பிட்டி தர்மபால மாவத்தை பிந்தல சந்தியில் காலை 10.30 மணியளவில் இத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இத் தாக்குதலில் இரு இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். மேலும் 16 பேர் படுகாயமடைந்தனர். எட்டு வாகனங்கள் சேதமடைந்தன.

(04 ஆம் பக்கம் பார்க்க)



### நேற்றுத் தொடக்கம் 18 1/2 மணிநேர மின்சாரம்

யாழ்.குடாநாட்டில் நேற்று முதல் 18 1/2 மணி நேர மின்சாரம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக யாழ்.சிவில் ஒருங்கிணைப்பு அதிகாரி கேணல் பெரேரா தெரிவித்தார்.

## தற்கொலைத் தாக்குதலுக்கு அரசாங்கம் கடும் கண்டனம்

(கொழும்பு)

பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய

தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

இத்தாக்குதலில் இருவர் கொல்லப்பட்

### போக்குவரத்துச் சபை ஊழியர்கள் நேற்று பகிஷ்கரிப்பு போராட்டம்

யாழ். மத்திய பேருந்து நிலையம் திடீரென முற்றவெளிக்கு இடமாற்றம் செய்யப்பட்டமைக்கு கண்டனம் தெரிவித்து வட பிராந்திய போக்குவரத்துச் சபை ஊழியர்கள் நேற்று பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

ணைப்பு அதிகாரி கேணல் பெரேரா தெரி
வித்தார்.

இதனடிப்படையில் அதிகாலை 4 மணி முதல் காலை 7 மணிவரையும் பின்னர் காலை 8.30 மணி முதல் நள்ளிரவு 12 மணிவரையுமென இரு தடவைகளாகப் பிரித்து 18 1/2 மணிநேர மின்சாரம் வழங்கப்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

வலிகாமம் மேற்கு உட்பட பல பகுதிகளில் இரவு நேர மின்சாரம் 7.30 மணிக்கு ஆரம்பித்து ஒரே நேரத்தில் சீராக வழங்க முடியாமை உள்ளதாகவும் இந்தப் பிரச்சினை விரைவில் நீக்கப்படுமென யாழ்.சிவில் ஒருங்கிணைப்பு அதிகாரி கேணல் பெரேரா மேலும் குறிப்பிட்டார். (எ-5)

## கடத்தப்பட்ட இளைஞன் சடலமாக மீட்பு

ஊர்காவற்றுறை பனை தென்னை அபிவிருத்தி கூட்டுறவுச் சங்க ஊழியர் ஒருவர் நேற்று முன்தினம் மாலை கடத்தப்பட்டு நேற்றுக் காலை நெரிஞ்சிமுனையில் கழுத்து வெட்டப்பட்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டார்.

வெட்டிக்கொலை செய்யப்பட்டவர் நாரந்தனை தெற்கைச் சேர்ந்த பானியல் குயின்ஸ்ரனி (வயது 24) என்ற இளைஞனே என உறவினர்களால் அடையாளம் காணப்பட்டார்.

சம்பவ இடத்திற்கு சென்று விசாரணைகளை மேற்கொண்ட ஊர்காவற்றுறை நீதிவான் ஜெயராமன் றொக்ஸி சடலத்தை பிரேத பரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்குமாறு ஊர்காவற்றுறை பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (எ-5)

(கொழும்பு)

பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ மீது நேற்று காலை கொழும்பில் வைத்து மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் முயற்சியினை அரசாங்கம் கண்டித்துள்ளது.

பொலிஸ் விசாரணைகள் இன்னும் நிறைவடையாத நிலையிலிருக்கின்ற போதும் தற்கொலைத் தாக்குதல் நடத்தப்பட்ட விதமானது இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் நடத்தி வரும் தற் கொலைத் தாக்குதல்களுக்குரிய அடையாளங்களைக் கொண்டுள்ளது என அரசாங்கத் தகவல் திணைக்களம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது. அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

இத்தாக்குதலில் இருவர் கொல்லப்பட்டுள்ளனர். எட்டு இராணுவத்தினரும் 5 சிவிலியன்களும் காயமடைந்துள்ளனர். பாதுகாப்புச் செயலாளரின் வாகனம் கடுமையாகச் சேதமடைந்துள்ளது.எவ்விதத்திலும் நியாயப்படுத்தமுடியாத இக்கொடூரமான தாக்குதலை அரசு கண்டிக்கும் அதேவேளை, ஜனநாயக ரீதியாகத் தெரிவு செய்யப்பட்ட ஒரு அரசாங்கத்தை இவ்வாறான பங்கரவாத தந்திரோபாயங்களால் பணியவைக்க முடியாது என்பதை அழுத்தமாக தெரிவித்துக் கொள்கிறோம்.இலங்கை அரசாங்கமானது தன்னை முழுமையாக சமாதா (04 ஆம் பக்கம் பார்க்க)

தியபோக்குவரத்துச் சபை ஊழியர்கள் நேற்று பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

எனினும் பாடசாலை மாணவர்களுக்கான சேவைகள் மட்டுமே மட்டுப்படுத்தப்பட்ட அளவில் மேற்கொள்ளப்பட்டது.

புதிதாக மாற்றப்பட்ட இடத்தில் தமக்கு போதிய வசதிகள் இல்லை எனவும் அவற்றை ஏற்படுத்தித்தருமாறு கோரியும் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டதாக தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை பேருந்து நிலையத்தை பண்ணைப் பகுதிக்கு மாற்றியுள்ளதால் நோயாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பண்ணைப் பகுதியிலிருந்து யாழ். ஆஸ்பத்திரிக்கு நடக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக அவர்கள் தெரிவித்தனர். (எ-133)

# யாழ். நகரப் பகுதியில் கிளைமோர் தாக்குதல்

## இரு பொலிஸார் பலி

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலைக்கு முன்பாகவுள்ள காந்தி சிலைக்கு அருகில் மோட்டார் சைக்கிளில் பொருத்தப்பட்டிருந்த கிளைமோர் வெடித்ததில் பொலிஸார் இருவர் கொல்லப்பட்டனர்.

இச் சம்பவம் நேற்று பிற்பகல் 2.40 மணியளவில் இடம் பெற்றது. சம்பவத்தில் யாழ்.பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த ரண்பண்டா மற்றும் திலகும்பர என்ற இரு பொலிஸ் கான்ஸ்டபிள்களே கொல்லப்பட்டவர்களாவர்.

சம்பவ இடத்திற்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்ட மாவட்ட பதில் நீதிவான் மு.திருநாவுக்கரசு சடலங்களை பிரேத பரிசோதனையின் பின் உறவினர்களிடம் ஒப்படைக்குமாறு யாழ்.பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

இதேவேளை இச் (04 ஆம் பக்கம் பார்க்க)

## குடும்பப் பெண் சுட்டுக்கொலை

(யாழ்ப்பாணம்)

யாழ்.ஓட்டுமடத்தில் நேற்று நண்பகல் 12.30 மணியளவில் குடும்பப் பெண் ஒருவர் வீட்டில் வைத்து இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். கொல்லப்பட்டவர் ஓட்டுமடம் அராலி வீதியைச் சேர்ந்த ஐந்து பிள்ளைகளின் தாயாரான தேவதாஸன் விமலா (வயது 53) எனத் தெரிவிக்கப்பட்டது.

சம்பவ இடத்திற்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்ட யாழ்.மாவட்ட பதில் நீதிவான் மு.திருநாவுக்கரசு சடலத்தை பிரேத பரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில், ஒப்படைக்குமாறு யாழ்.பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (ச-5)

# மாணவர்களின் சுபீட்சமான எதிர்காலத்தை உருவாக்குவது பெற்றோர், ஆசிரியர் கடமை-51ஆவது படையணி அறிக்கை

கடந்த காலங்களில் இராணுவத்துக்கெதிராக நடைபெற்ற நாசகாரச் செயற்பாடுகளுக்கு கல்வித் திணைக்களத்தின் வளங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளதாக தங்களுக்கு தகவல்கள் கிடைத்துள்ளதாகவும் இதுபோன்ற செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்குவதிலிருந்து விலகி, மாணவர்களினதும் பொது மக்களதும் பாதுகாப்புக்கு ஒத்துழைப்பு வழங்குமாறும் 51ஆவது படையணி இருவேறு அறிக்கைகளின் மூலம் கோரிக்கை விடுத்துள்ளது. பாடசாலை மாணவர்களின் பெற்றோர் மற்றும் ஆசிரியர்களின் கவனத்துக்கு என வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில்,

கடந்த காலங்களில் பாதுகாப்பு படையினருக்கு எதிராக நடைபெற்ற அனைத்து தாக்குதல்களும் பாடசாலை மாணவர்கள் மிக அதிகளவாக இருக்கும் இடங்களில் தான் நடைபெற்றுள்ளன. இதற்குப் பாடசாலை மாணவர்களை பயன்படுத்தியதும், இப் போதும் மேல் வகுப்பு மாணவர் களையும், தனியார்கல்விநிலையமாணவர்களையும் இணைத்துக் கொண்டு புலிகள் செயற்படுவதாகவும்படையினருக்கு தகவல்கள் கிடைத்துள்ளன.

எனவே இவ்வாறான நாசகார செயல்களில் மாணவர்கள் ஈடுபடுவது, ஒத்துழைப்பு வழங்குவது நிரூபிக்கப்பட்டால் இதர அப்பாவி மாணவர்களும் பாதிக்கப் படுவதுடன், கல்வி செயற்பாடுகளும் பாதிப்புக்குள்ளாகும்.

எனவே இதுபோன்ற செயல்களில் மாணவர்கள் ஈடுபடுவதையோ, ஒத்துழைப்பு வழங்குவதையோ தடுத்துநிறுத்துவது பெற்றோர், ஆசிரியர்களின் கடமையாகும். உங்களதுபிள்ளைகளின், மாணவர்களின் சுபீட்சமான எதிர் காலத்தை உருவாக்கி கொடுப்பது உங்களின் தலையாய கடமையாகும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் கல்வி சார் பிரிவினருக்குஎனவிழித்துள்ள அறிக்கையில்,

இராணுவத்தினருக்கு எதிராக நடைபெற்ற நாசகார செயற்பாடுகளுடன் தொடர்புடைய புலிகள் இயக்கத்தினர் கடந்த காலங்களில் கல்வித் திணைக்களம், வலயக் கல்வி அலுவலகங்கள், பாடசாலைகளின் கல்வி சார் நடவடிக்கைகளுக்காக வழங்கப்பட்டுள்ள தொலைபேசிகளை தமது நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தி வந்துள்ளனர்.

தங்களுக்கிடையிலான தொடர்புகளை பேணுவதற்கு இந்த அலுவலகங்களிலுள்ள தொலைபேசிகள் பயன்படுத்துவதுடன் இந்த இடங்களை தமது மறைவிடங்களாகவும் பாவித்து தப்பித்துக் கொள்கின்றனர். இவ் விடயம் பாதுகாப்புப் படையினரின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

எனவே, குறிப்பிட்ட கல்வி சார் நிறுவனங்கள் நாசகாரச் செயல்களில் ஈடுபடுபவர்களுக்கு புகலிடம் வழங்குவதிலிருந்தும், தொலைபேசி சேவையை வழங்குவதிலிருந்தும் தங்களை விடுவித்துக் கொள்ள வேண்டும்.

இதன்மூலம் யாழ். குடாநாட்டில் உள்ள மாணவ மாணவிகளினதும் பொதுமக்களினதும் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு பாதுகாப்புப் படையினருக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றோம் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

# வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் சிங்கள மாணவர்கள் வெளியேறினர்

வவுனியா தேசியக் கல்வியியல் கல்லூரியில் பயிலும் சிங்கள மாணவர்களுக்கு அடையாளம் தெரியாத ஆயுதபாணிகளால் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டதனையடுத்து அக்கல்லூரியின் சிங்கள மாணவர்கள் பாதுகாப்பு கருதி வீடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

25வீத சிங்கள மாணவர்களை கொண்ட இக்கல்லூரியில் 500 மாணவர்கள் பயில்கிறார்கள்.

இரண்டாம் வருட சிங்கள மாணவர்களுக்கு ஏற்கனவே நேற்று முன்தினம் முதல் விடுமுறை வழங்கப்படவிருந்த போதிலும் முதலாம் வருட மாணவர்களுக்கு எதிர்வரும் 8ஆம் திகதி வரை கற்கை நெறிகள் இடம் பெற விருந்தது. எனினும்சகல சிங்கள மாணவர்களுக்கு அடுத்த ஆண்டு வரை விடு முறை விடகல்வியமைச்சு அனுமதி வழங்கியுள்ளது.

இதேவேளை ஏனைய முதலாம் வருட தமிழ் மாணவர்களுக்கு எதிர் வரும் 8ம் திகதி வரை கல்வியியற் கல்லூரியின் கற்கை நெறிகள் நடைபெறும் என வவுனியா தேசியக் கல்வியியற் கல்லூரி பீடாதிபதி பெனாட் தெரிவித்தார். (ச)

# அறிவுறுத்தல் கூட்டம் இடமாற்றம்

யாழ்.வேம்படி மகளிர் கல்லூரியில் நாளை காலை 10 மணிக்கு நடைபெறவிருந்த பரீட்சை அறிவுறுத்தல் கூட்டம் தவிர்க்க முடியாத காரணத்தினால் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாக யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் தி. செல்வரத்தினம் அறிவித்துள்ளார்.

அவ் அறிவுறுத்தல் கூட்டம் நாளைக் காலை 9.30 மணிக்கு யாழ்.மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது. (ச)

## 12ஆம் ஆண்டு நினைவஞ்சலி

### சிவகுரு நவரத்தினம்

(கனகா பத்திரிகை விற்பனையக உரிமையாளர்)



பிறப்பு: 27.11.1949

மறைவு: 17.11.1994

திதி: திரயோதசி

இல்லறத்தை நல்லறமாய் நடத்தியே!
இவ்வுலகில் பெருமையுடன் வாழ்ந்தீர்கள்!
நல்லவராய் வல்லவராய் வாழ்ந்தே
நாளெல்லாம் நற்பணிகள் செய்தீர்கள்!
பிள்ளைகளை பிரியமுள்ள மனைவியினை
பெற்ற நாள் முதலாய் பேணிக் காத்தீர்கள்!
வல்லவராய் வையமதில் வளமோடு வாழ்ந்த
வரலாற்றை எண்ணி வியக்கின்றோம் அப்பா!

நிரந்தர முகவரி,
கைதடி கிழக்கு கைதடி,
தற்காலிக முகவரி,
இல.60 பலாலி றோட், திருநெல்வேலி.
02.12.2006

என்றென்றும் நினைவுகளுடன்,
மனைவி, பிள்ளைகள்.

# யாழ். பல நோ.கூ.சங்கக் கிளைகளில் தாமதமின்றி பொருட்களைப் பெறலாம்

## அதன் தலைவர் தெரிவிப்பு

யாழ்பாண பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைகளில் இனி வரும் நாட்களில் எவ்வித காலதாமதமுமின்றி பொருட்களைப் பெற்றுக் கொள்ள முடியும் என யாழ். பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் எஸ்.ரி.கணநாதன் தெரிவித்தார்.

யாழ். பல நோக்குக் கூட்டுறவுச் சங்க கிளைகளில் 250 முதல் 2 ஆயிரம் வரையிலான பாவனையாளர்கள் இருந்த நிலையை மாற்றி சகல கிளைகளிலும் ஓரளவு சமனான பாவனையாளர் கள் வரக் கூடிய விதத்தில் பிரதேச செயலர் கள் வெகு விரைவில் மாற்றி அமைப்பார்கள்.

அதன் பின் நெருக்கடி, பிரச்சனை ஏற்பபாது. அத்தோடு விசேட கிளைகளும் சாதாரண கிளைகளாக மாற்றப்பட்டு விடும் அனேகமாக ஒரு கிளைக்கு 700 முதல் 750 வரையிலான பாவனையாளர்களே இருப்பார்கள். இது விநியோகங்களை சீராகவும், நேர காலத்தோடும், மக்களை அலைகழிக்காமலும் செய்யக் கூடிய வாய்ப்புக்கள் ஏற்படுத்தப்படுவதோடு சகல விநியோகங்களையும், நானாவித சில்லறை பொருட்களையும் பாவனையாளர்கள் ஒரே கிளையிலேயே தொடர்ந்தும் பெறுவதற்கு சிரமமில்லாமல் ஏற்பாடு செய்யப்படுகின்றது என அவர் மேலும் தெரிவித்தார். (ச)

# அழைப்புக்கட்டளை

## (இல.16-பிரிவு 55(1))

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றில்

வழ/.இல.716,
மணநீக்கம்

நடராசா ஸ்ரீகிருபாகரன் பெண் (அருணாசலம் செந்தி வேலாயுதம் மகள்) கீர்த்திகா
மே/பா.ஐ.பஞ்சாட்சரம்
துவாரகை வீதி, கோண்டாவில் வடக்கு
கோண்டாவில்.

-வழக்காளி

எதிர்:
நடராசா ஸ்ரீகிருபாகரன்
சில்லியோடை பாடசாலையடி,
கரணவாய் தெற்கு, கரவெட்டி.

-எதிராளி

மேலே பெயர் குறிப்பிட்டுள்ள எதிராளிக்கு

மேலே பெயர் குறிப்பிடப்பட்டுள்ள வழக்காளிக்கும், உமக்கும் இடையில் நடைபெற்ற திருமணத்தை இரத்துச் செய்து விவாகரத்து வழங்குமாறு கோரி, வழக்காளி இம்மன்றில் உமக்கெதிராக வழக்கு தொடர்ந்துள்ளாராதலினால், அதற்கு உமது மறுமொழி ஏதேனும் இருப்பின் 2007ம் ஆண்டு தை மாதம் 05ந் திகதிக்கு முன்னர் இந் நீதிமன்றில் கோப்பிடுமாறு இத்தால் நீவிர் தேவைப்படுத்தப்படுவதோடு, சொல்லப்பட்ட தேதியன்று அல்லது அதன் முன்னர் நீவிர் மறுமொழி கோப்பிடத் தவறும் பட்சத்தில் வழக்கானது, மறுகட்சிக்காரரில்லாமலே மேற்கொண்டு நடத்தப்பட்டு, விளங்கப்படுமெனஅறிந்து கொள்ளுமாறு நீவிர் இத்தால் தேவைப்படுத்தவும் படுகின்றீர். பதிவு பெற்ற சட்டத்தரணி மூலம் நீவிர் தோன்றாவிடின் சட்டமுறையான எல்லா அறிவித்தல்களும் சேர்ப்பிக்கக் கூடிய முகவரியொன்றைக் கூறும் விபரக் குறிப்பொன்றை கோப்பிடுமாறு நீவிர் மேலும் தேவைப்படுத்தப் படுகின்றீர்.

நீதிமன்றக்கட்டளைப்படி

வரைவு
வழக்காளி சட்டத்தரணி

து. சிறிமோகன்
பதிவாளர்

குறிப்பு:- விளக்கத்தேதியை நிர்ணயிப்பதற்காக பகிரங்க நீதிமன்றத்தில் இவ்வழக்கு நடைபெறும் திகதி பற்றிய அறிவித்தலை நீவீர் பெற விரும்பினால் பதிவு செய்யப்பட்ட முகவரியொன்றை இந்நீதிமன்ற பதிவாளரிடம் கொடுத்துதவுமாறும் பதிவஞ்சல் மூலம் அனுப்பிவைப்பதற்காகும் செலவை மேவுவதற்கு தேவைப்படும் முத்திரைகளை கொடுக்குமாறும் 80ம் பிரிவின் கீழ் நீவிர் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

2006ம் ஆண்டு கார்த்திகை மாதம் 22ந்திகதியாகிய இன்று

து.சிறீமோகன்
பதிவாளர்

(500)

# மரண அறிவித்தல்

## செல்வி சரஸ்வதி சின்னத்தம்பி

### (ஓய்வுபெற்ற ஆசிரியை-பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி)

வேலணையைப் பிறப்பிடமாகவும் கொழும்பு கொட்டாஞ்சேனையை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி சரஸ்வதி சின்னத்தம்பி 29.11.2006புதன்கிழமை கொழும்பில் காலமானார். அன்னாரின் மரணச்சடங்கு 30.11.2006 வியாழக்கிழமை கொழும் பில் நடைபெற்றது.

அன்னார் காலஞ்சென்றவர்களான பிரபல அக்குரஸை வர்த்தகர் சின்னத்தம்பி-ஆச்சிமுத்து தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான ஓய்வுபெற்ற ஆசிரியை திருமதி நாகரத்தினம் பொன்னுத்துரை, திருமதி தங்கம்மா நாகராசா ஆகி யோரின் அருமைச் சகோதரியும், காலஞ்சென்ற அதிபர்களான பண்டிதர் பொன்னுத்துரை, நாகராசா ஆகியோரின் மைத்துனியும் திருமதி நாகேஸ்வரி திருநாவுக் கரசு, கலியாணசுந்தரம், திருமதி கமலாதேவி தர்மலிங்கம், பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை, விமலேந்திரன் (கனடா) மகாதேவா (தேவா-அவுஸ்திரேலியா) பாலேந்திரன் (கனடா) திருமதி ராஜாமணிராணி பத்மநாதன் (லண்டன்) திருமதி விமலாதேவி விஜயகுமார் (கனடா) யோகேந்திரன் (லண்டன்) சற்குணசீலன் (தவா-அவுஸ்திரேலியா) இரவீந்திரன் (லண்டன்) புவனேந்திரன் (லண்டன்) திருமதி சற்குணராணி ஜெயவரதன் (லண்டன்) திருமதி நிர்மலாதேவி லோகராஜன் (கனடா) காலஞ் சென்ற வற்சலாதேவி ஆகியோரின் சிறிய தாயாரும் ஆவர். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்;
பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை

(499)

கட்டுப்பாடான முயற்சியினாலும் கடுமையான உழைப்பினாலும் மனிதன் உண்மையை எய்த முடியும்.

–டாக்டர் இராதாகிருஷ்ணன்

வலம்புரி

## மீண்டும் தொடங்கும் நோர்வேயின் சமாதான முயற்சி

இலங்கை இனப்பிரச்சினைக்கு சமாதான வழியில் தீர்வு காண்பதற்காக நோர்வே எடுத்த முயற்சி அளப்பரியது.

எந்தவிதமான எதிர்பார்ப்புக்களுக்கும் இல்லாத அப்பழுக்கற்ற நோர்வேயின் முயற்சி காரணமாகவே 2002 ஆம் ஆண்டில் யுத்த நிறுத்த உடன்படிக்கை அமுலுக்கு வந்தது.

யுத்த நிறுத்த உடன்படிக்கை அமுலுக்கு வந்ததால் நாட்டில் ஏற்பட்டிருந்த யுத்தப்பிரளயம் தணிவு பெற்றது. இதனால் உயிர்பிழைத்தவர்கள் ஏராளம்.

எனினும் நாட்டில் சமாதானம் ஏற்படுவதை விரும்பாத பேரினவாத சக்திகள் நோர்வேக்கு எதிராக போர்க்கொடி தூக்கின.

சமாதான அனுசரணைப் பணியில் இருந்து நோர்வேயை வெளியேற்ற வேண்டும் என்பது முதல், நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவராக இருந்த எரிக்சொல் ஹெய்மை பாராளுமன்றத்தில் அவதூறாக பேசியதுவரை பேரினவாத சக்திகளின் அநாகரிகமான செயல்களை நோர்வே சகித்துக் கொண்டது.

நோர்வேயின் இச் சகிப்புத் தன்மைக்கு சுயநலம் ஏதும் கிடையாது. மனிதப் படுகொலைகளை தடுத்து நிறுத்துவதும் யுத்தத்தால் ஏற்படக் கூடிய பேரழிவுகளைத் தடுப்பதுமே நோக்கமாகும்.

இவ் உயரிய நோக்கை அடைவதற்காக நோர்வே எடுத்த முயற்சிகள் உண்மையில் போற்றப்பட வேண்டியவை.

இருப்பினும் நோர்வேயின் உயர்ந்த மனப்பாங்கை கொழும்பில் இருந்து வெளிவரும் சிங்கள, ஆங்கில நாளிதழ்கள் கொச்சப்படுத்தின,

எழுந்தமானமாக கருத்துக்களை வெளியிட்ட அவை, இப்பொழுது எரிக்சொல் ஹெய்முக்கு விடுதலைப்புலிகள் லஞ்சம் கொடுத்துள்ளனர் என்ற குற்றச்சாட்டையும் எதுவித ஆதாரமும் இன்றி எழுதித் தள்ளியுள்ளன.

இலங்கையில் அமைதியை ஏற்படுத்தவேண்டும் என நினைத்த குற்றத்திற்காக நோர்வே பட்டது போதும் என்றாயிற்று.

ஆயினும் அந்த நாட்டு மக்களின் மென்மையான போக்கும் மானிடத்தை மதிக்கும் மனப்பாங்கும் மேலோங்கி நிற்பதனால் இலங்கையில் சமாதானத்தை ஏற்படுத்தும் அதன் முயற்சி தொடர்கிறது.

விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் மாவீரர் தின உரைக்குப் பின்னர் நோர்வே நாட்டின் விசேட சமாதானத் தூதுவர் இலங்கைக்கு வருகை தந்துள்ளார்.

நோர்வேயிடம் இருக்கக்கூடிய உயர்ந்த உள்ளத்தின் ஒரு சிறிய பங்கேனும் இலங்கை அரசுக்கு இருந்திருக்குமாயின் நோர்வேயின் முயற்சி நிச்சயம் வெற்றி பெற்றிருக்கும்.

# புலிகளை பலவீனப்படுத்தினால் நாட்டில் அமைதி ஏற்படும்!

(வாஷிங்டன்)

இலங்கையில் அமைதி ஏற்படுத்த மேற்கொள்ளப்படும் சமரச முயற்சிகள், இராணுவரீதியில் விடுதலைப்புலிகளின் கரத்துக்கு வலு சேர்ப்பதில் முடிந்து விடக்கூடாது என்று இலங்கை இராணுவ தளபதி சரத் பொன்சேகா எச்சரித்துள்ளார். 3 நாள் பயணமாக அமெரிக்கா சென்றுள்ள அவர் கூறியதாவது:

4 ஆண்டு காலமாக அமுலில் இருந்த போர் நிறுத்த உடன்பாட்டின் போது விடுதலைப் புலிகள் தனது தாக்குதல் திறனை வலுப்படுத்திக் கொண்டனர்.

இராணுவ ரீதியில் புலிகளின் தலைவர் பிரபாகரனை பலவீனப்படுத்தினால் மட்டுமே இலங்கையில் அமைதி ஏற்பட வாய்ப்பு ஏற்படும்.

விடுதலைப் புலிகளினை பலவீனப்படுத்தும் ஆற்றல் இலங்கை இராணுவத்துக்கு உள்ளது. அதை கடந்த சில மாத சம்பவங்கள் நிரூபிக்கும் என்றார் பொன்சேகா.

இதற்கு முன்பே அமெரிக்க பயணத்துக்கு திட்டமிட்டிருந்தார் பொன்சேகா. ஆனால் ஏப்ரலில் நடந்த தற்கொலைப் படைத் தாக்குதலில் பலத்த காயம் அடைந்ததால் அமெரிக்க பயணத்தை தள்ளிப் போட்டார்.

தற்போது அமெரிக்கா சென்றுள்ள பொன்சேகா, அமெரிக்கா அதிகாரிகளுடன் கருத்துப் பரிமாற்றம் செய்த கொள்ளும் நோக்கில் வந்துள்ளார்.

வெளியுறவுத்துறையின் அரசியல் விவகாரத்துறைச் துணைச் செயலர் நிக்கோலஸ் பர்ன்ஸ், இலங்கை விவகாரத்தை கவனிக்கும் தெற்கு ஆசிய பிரிவு மூத்த அதிகாரிகள், இராணுவ உயர் அதிகாரிகளையும் சந்தித்துப் பேசியுள்ளார். (ச–5)

# பயங்கரவாதத்தை ஒழிக்க தமிழ் மக்கள் முன்வர வேண்டும்

## பிரதமர் வலியுறுத்தல்

(வியட்நாம்)

பயங்கரவாதத்தை ஏற்பதா? இல்லையா? என்பதை தமிழ் மக்களே தீர்மானிக்க வேண்டும் என்று பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க தெரிவித்துள்ளார்.

தற்போதைய பிரச்சினையைத் தீர்ப்பதற்கு முன்வைக்கப்படும் இரண்டு காரணங்கள் குறித்து கவனம் செலுத்த வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

பயங்கரவாதத்தின் மூலம் தீர்வு காண்பதா? அல்லது பேச்சுவார்த்தையின் மூலம் தீர்வு காண்பதா? என்பது குறித்தே கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக வியட்நாம் விஜயத்தின் போது ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் இந்தக் கருத்தை தெரிவித்தார்.

அதிகார பகர்வின் மூலமே இப்பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும் என்பதே அரசாங்கத்தின் நோக்கம் என அவர் மேலும் குறிப்பிட்டார்.

நிரந்தர சமாதானத்தை வலியுறுத்தி தமிழ்த் தேசிய கூட்டமைப்பை தவிர பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் ஏனைய அரசியல் கட்சிகள் யோசனை களை தயாரித்து வருவதாக பிரதமர் குறிப்பிட்டார். இந்த தேசிய யோசனைக்கு விடுதலைப்புலிகள் மாற்று நடவடிக் கையை எடுக்க கூடும் என அவர் சுட்டிக்காட்டினார். (ச–7)

# யுத்தநிறுத்த உடன்படிக்கையிலிருந்து விலக இந்தியா ஒருபோதும் அனுமதிக்காது

## பிரணாப் முகர்ஜி தெரிவிப்பு

யுத்தநிறுத்த உடன்படிக்கையிலிருந்து விலகுவதற்கோ தனி இராஜ்ஜியத்தை நோக்கி செல்வதற்கோ இந்திய உட்பட சர்வதேச சமூகம் ஒருபோதும் அனுமதிக்காது என்று இந்திய வெளியுறவு அமைச்சர் பிரணாப் முகர்ஜி தெரிவித்துள்ளார்.

இந்தியாவுக்கான உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டுள்ள எதிர்க்கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேற்று முன்தினம் வியாழக்கிழமை மாலை இந்திய வெளியுறவு அமைச்சு அலுவலகத்தில் வைத்து பிரணாப் முகஜீயைச் சந்தித்தார். அப்போதே பிரணாப் முகர்ஜி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த இந்திய வெளியுறவு அமைச்சர் கூறுகையில்; வடக்கு கிழக்கு பிரச்சினைக்கு அரசியல் தீர்வை காண்பதற்கு இந்தியா முழுமையான ஆதரவினை வழங்கும். இனப்பிரச் சினைக்கு யுத்தம் மூலம் எவ்வகையிலும் தீர்வு காண முடியாது.

யுத்தத்தினால் அனைத்து தரப்பினரும் மற்றும் பொது மக்களும் பாதிக்கப்படுவார்களே தவிர வெற்றிகள் எதனையும் பெற முடியாது எனவே சமாதான பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கு இரு தரப்பினரும் முயற்சிக்க வேண்டும். இது தான் இந்திய பிரதமர் தலைமையிலான இந்திய அரசாங்கத்தின் நிலைப்பாடாகும்.

இந்த நிலைப்பாட்டிலிருந்து நாங்கள் ஒருபோதும் மாறமாட்டோம். சர்வதேச சமூகத்தின் நிலைப்பாடும் இதுவாகும் இந்தப் பிரச்சினையைத் தீர்க்க முடியும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும் என்று கூறினார். (ச)

# ஆங்கில மொழித்திறன் நிறைவு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் ஆங்கில மொழி மூல ஆசிரிய மாணவர்களின் ஆங்கில மொழித் திறன் விருத்தியை அபிவிருத்தி செய்யும் நோக்குடன் கல்வி அமைச்சால் நடாத்தப்பட்ட Immersion Course இன் நிறைவு நிகழ்வுகள் கல்லூரியின் பீடாதிபதி எஸ்.கே யோகநாதன் தலைமையில் இன்று காலை 10.30 மணிக்கு கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ். உயர் தொழில் நுட்ப நிறுவன இயக்குநர் வே. கருணாநிதி கலந்து கொள்கிறார். இந்நிகழ்வில் ஆங்கில மொழித்திறனுடன் தொடர்புடைய மாணவர்களின் சிறப்பாக்கங்களும் இடம் பெறவுள்ளன. (ச)

# 3255 தபால் பொதிகள் யாழ். எடுத்துவரப்பட்டன

(யாழ்ப்பாணம்)

திருமல்லயில் இருந்து யால கப்பல் மூலம் எடுத்துவரப்பட்ட தபால் பொதிகளில் 220 பொதிகள் ஒரு லொறியில் பிரதம தபாலகத்திற்கு எடுத்துவரப்பட்டன.

ஏனைய பொதிகளை ஏற்றுவதற்காக மேலும் ஐந்து லொறிகள் பருத்தித்துறையில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. மேற்படி கப்பலில் 3 ஆயிரத்து 255 தபால் பொதிகள் ஏற்றப்பட்டன.

நேற்றைய தினம் எடுத்துவரப்பட்ட தபால் பொதிகள் தவிர்ந்த ஏனைய பொதிகள் இன்றும் எடுத்துவரப்படவுள்ளது. எடுத்துவரப்பட்ட தபால் பொதிகள் தரம்பிரிக்கப்பட்டு எதிர் வரும் செவ்வாய்க்கிழமை முதல் விநியோகிக்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ச–133)

# சமயதீட்சை


(பொன்னாலை)

அராலி கிழக்கு ஆவரசம்பிட்டி ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலய சமய தீட்சை வழங்கும் வைபவம் நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது. தீட்சையை சிவ ஸ்ரீ. க. சுந்தரராஜக்குருக்கள் வழங்கவுள்ளார். (ச–49)

# போயா ஆன்மீக நிகழ்ச்சிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையத்தில் நாளை மறுதினம் திங்கட்கிழமை போய ஆன்மீக நிகழ்ச்சிகள் காலை 9 மணிக்கு ஆரம்பமாகி நண்பகல் நாராயண சேவையுடன் நிறைவு பெறும். (ச)



தாக்குதலுக்குப் பயன்படுத்தப்பட்ட ஆட்டோ.தாக்குதலில் இருந்து தப்பிய கோத்தபாய ராஜபக்ஷவை கட்டித் தழுவும் ஜனா திபதி யும்;படங்களில் காணலாம்.

# கடத்தப்பட்ட 3 குடும்பஸ்தர்கள் அம்பாறையில் சுட்டுக்கொலை

அம்பாறையில் குடும்பஸ்தர்கள் மூவர் சுட்டுப்படுகொலை செய்யப்பட்டுள்ளனர். விநாயகபுரத்தைச் சேர்ந்த மயில்வாகனம் அருளானந்தம் (வயது 28) ,விநாயகபுரம் 4 ஆம் குறிச்சி பழைய தபாலக வீதியைச் சேர்ந்த சபாரத்தினம் ரவீந்திரன் (வயது 30), விநாயகபுரம் முதலாம் வீதியைச் சேர்ந்த கந்தசாமி சந்திரன் (வயது 35) ஆகிய மூவரே சுட்டுக்கொல்லப்பட்டவர்களாவர்.

கொல்லப்பட்ட மூவரையும் அவர்களது வீட்டிலிருந்து நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு 9 மணியளவில் பிடித்துச் சென்ற அதிரடிப்படையினர் விநாயகபுரம் சக்தி வித்தியாலயத்திற்கு முன்பாக வைத்து சுட்டுப்படுகொலை செய்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது.இச் சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ச-5)

# தற்கொலைத் தாக்குதலுக்கு அமெரிக்கா கடும் கண்டனம்

தமிழீழ விடுதலைப்புலிகள் வன்முறையை கைவிட்டு அமைதித்தீர்வுக்கான பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ளுமாறு அமெரிக்கா வலியுறுத்தியுள்ளது.

பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ பயணம் செய்த வாகனத் தொடரணி மீது நேற்றுக் காலை நடத்தப்பட்ட தாக்குதலைக் கண்டித்து வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே அமெரிக்கத் தூதரகம் இதனை வெளியிட்டுள்ளது.

இந்தத் தாக்குதலில் பாதுகாப்புச் செயலாளர் உயிர் தப்பியமை தெய்வாதீன செயல் என குறிப்பிட்ட அமெரிக்கா, இந்த சம்பவத்தில் உயிரிழந்த மற்றும் காயமடைந்தவர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கு ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துள்ளது. (ச-7)

# மட்டுவில் தெற்கில் இளைஞன் சுட்டுக்கொலை

(மட்டுவில்)

மட்டுவில் தெற்கில் நேற்று முன்தினம் மாலை 6.20 மணிக்கு இளைஞன் ஒருவர் இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். இச் சம்பவத்தில் மட்டுவில் தெற்கு முருகன் கோயில் வீதியைச் சேர்ந்த ஜெயக்குமார் கிரியன் (வயது 24) என்ற இளைஞனே சுட்டுக்கொல்லப்பட்டவராவார்.

குறித்த இளைஞன் நண்பர் ஒருவர் வீட்டிற்கு வீடியோப் பிரதியைப் பெற்றுக்கொள்வதற்கு சென்ற போதே இச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

சம்பவ இடத்திற்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்ட சாவகச்சேரி நீதிவான் க.பிறேம்சங்கர் சடலத்தை பிரேதபரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (எ-5)

# வாகனத் தொடரணியை...

இலங்கை பாதுகாப்பு செயலாளரும் ஜனாதிபதிமகிந்த ராஜபக்ஷவின் இளைய சகோதரருள் ஒருவருமான கோத்தபாய ராஜபக்ஷவை இலக்கு வைத்து அவர் பயணித்த வாகனத் தொடரணி மீது நேற்று பகல் 10.40 மணியளவில் குண்டுத் தாக்குதல் ஒன்று இடம் பெற்றுள்ளது.

கொழும்பில் மிகவும் பாதுகாப்பு ஏற்பாடுகள் நிறைந்த தர்மபால மாவத்தைப் பகுதியில் இருக்கின்ற பித்தளை சந்திக்கு அண்மையில் சென்று கொண்டிருந்த போதே அப்பகுதியில் தற்கொலை குண்டுதாரி சென்றதாக கருதப்படுகின்ற ஆட்டோ மோதியதால் இச்சம்பவம் இடம் பெற்றதாக பாதுகாப்புத் துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளார்கள்.

இந்த தாக்குதலில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் பயணித்துக் கொண்டிருந்த குண்டு துளைக்காத வாகனம் தப்பிய போதும் அதற்கு பாதுகாப்பிற்காகச் சென்று கொண்டிருந்த ஏனைய வாகனங்கள் இத் தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் சிக்குண்டு பலத்த சேதங்களுக்கு உள்ளாகின.

அத்தோடு அந்த பகுதியில் பயணித்த பொது மக்களின் வாகனங்கள் சிலவும் இந்த தாக்குதலில் சிக்குண்டு எரிந்தும் பலத்த சேதங்களுக்கு உள்ளாகின. ஜனாதிபதியின் உத்தியோகபூர்வவாசஸ்தலமான அலரிமாளிகைக்கு சில நூறு மீற்றர்கள் தொலைவில் இடம் பெற்ற இத்தாக்குதலில் உயிர்தப்பிய கோத்தபாய ராஜபக்ஷ நேரடியாகவே அலரி மாளிகை சென்று ஜனாதிபதியைக் கட்டித் தழுவியிருக்கின்றார். அவரது மேலாடையில் இரத்தக் கறைகள் படிந்திருந்த காரணத்தால் அவருடைய வானத்தில் சென்ற சிலரும் இத் தாக்குதலில் காயமடைந்திருக்கலாம் என சந்தேகிக்கப்படுகின்றது.

நேற்று நடைபெற்ற இத்தாக்குதலில் 2 இராணுவத்தினர் உயிரிழந்துள்ளனர். மேலும் 16 பேர் காயங்களுக்குள்ளாகினர். லான்ஸ் கோப்ரல் பிறேமசிறி மற்றும் லான்ஸ் கோப்ரல் விஜயரட்ண என்போரே உயிரிழந்தவர்களாவர். காயமடைந்தவர்களில் 7 பேர் இராணுவத்தினர் என தெரிவிக்கப்பட்டது.

அதேவேளை இந்த தாக்குதலில் உயிர் தப்பிய இலங்கை பாதுகாப்பு செயலாளர் இது குறித்து தெரிவித்ததாவது; விடுதலைப் புலிகளின் கோழைத்தனமான தாக்குதலே என இதை வர்ணிக்கின்றேன். இதனால் தனது நாட்டுக்கான பொறுப்புக்களில் இருந்து ஒதுங்க மாட்டேன் என்றும் புலிகளின் பயங்கரவாதத்தை ஒடுக்குவதற்கான தனது அர்ப்பணிப்புகள் மீள வலுப்படுத்தப்படும் என்று கூறியுள்ளார்.

கூட்டமொன்றில் பங்கேற்பதற்காக வந்து கொண்டிருந்தேன். எனது வாகனத் துக்கு முன்பாக சென்று கொண்டிருந்த வாகனங்களே கடுமையாக சேதங்களுக்கு உள்ளாகின எனது வாகனமும் சேதத்துக்குள்ளானது. வாகனத்தின் ஓட்டுநருக்கே வாகனத்தின் சேத விபரம் குறித்து தெரியும். எனக்கு எந்த விதகாயங்களும் ஏற்படவில்லை என்றார்.

இதே வேளை யாழ். வடமராட்சியில் 1987ம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட இராணுவத்தின் முதல் பாரிய நடவடிக்கையான ஒபரேசன் லிபரேசன் மற்றும் 1990ம் ஆண்டு திரிவிட பலய ஆகிய இராணுவ நடவடிக்கைகளில் முக்கிய பங்கேற்று லெப்.கேணலாக தரைப்படையை வழிநடத்தியவர் கோத்தபாய ராஜபக்ஷ என்பது குறிப்பிடத்தக்கது.

இராணுவத்தின் முக்கிய தளபதியாக இருந்து அராலி இறங்குதுறைப் பகுதியில் நடை பெற்ற அமுக்க வெடியில் கொல்லப் பட்ட டென்சில் கொப்பேக்கடுவவின் கட்டளையின் கீழ் அதிக இராணுவ நடவடிக்கைகளில் அவர் பங்காற்றியிருந்தவர்.

இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவும் சம தகுதியில் கோத்தபாய ராஜபக்சவுடன் செயலாற்றியிருந்தார்.1990ம் ஆண்டு மண்டைதீவை இராணுவம் ஆக்கிரமித்த திரிவிட பலய இராணுவ நடவடிக்கையில் நேரடியாக சரத் பொன்சேகாவும் கோத்தபாய ராஜபக்சவும் ஈடுபட்டிருந்தனர்.

அந்த இராணுவ நடவடிக்கையில் களத்தில் படைகளை நகர்த்திய மூன்று லெப். கேணல்களில் கோத்தபாய ராஜபக்சவும் சரத் பொன்சேகாவும் இருந்தனர். இதில் சரத் பொன்சேகா முதலாவது சிங்க றெஜிமன்ட் பட்டாலியனையும் கோத்தபாய ராஜபக்ஷ முதலாவது கஜபா றெஜிமன்ட் பட்டாலியனையும் வழிநடத்தியிருந்தனர் என தகவல்கள் தெரிவித்தன. (ச-7)

# இலங்கைக்கு செல்ல வேண்டாமென பிரான்ஸ் நாட்டு அரசு அறிவித்தல்

(கொழும்பு)

பிரான்ஸ் அரசு தனது பிரஜைகளை இலங்கைக்குச் செல்வதினை தவிர்த்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொண்டுள்ளது.

இலங்கையில் தொடர்ந்து ஏற்பட்டுவரும் வன்முறைகள் மோதல்கள் காரணமாக பாதிப்புகள் ஏற்படலாம் என எச்சரித்துள்ளது. பிரான்ஸ் வெளிவிவகார அமைச்சு விடுத்துள்ள பயண ஆலோசனைப்பற்றிய இணையத்தளத்தில் இவ் அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

தொடர்ந்து அதிகரித்துவரும் இனமோதல்களில் பிரஜைகள் பாதிப்படையாமல் இருப்பதற்கு தமது ஆலோசனைகளை மேற்கொள்ளுமாறு அறிவித்துள்ளது. (ச)

## யாழ்.நகரம்...

சம்பவத்தையடுத்து யாழ்.நகரில் இராணுவத்தினரும் பொலிஸாரும் பலத்த சோதனை நடவடிக்கை களை மேற்கொண்டனர். கடைகள் அனைத்தும் உடனடியாக இழுத்து மூடப்பட்டன. நகரில் நின்றிருந்தவர்கள் அனைவரும் ஓடி மறைந்தனர். இதனால் நகரம் சிறிது நேரத் தில் வெறிச்சோடியது. (ச-5)

## தற்கொலைத்...

னத்துக்காகவே அர்ப்ப ணித்துள்ளது. எனினும் நாட்டின் இறைமை யையும் நாட்டு மக்களையும் பாதுகாப்பதற் கான நடவடிக்கைகளை மேற்கொள்வதில் அரசாங்கம் ஒரு போதும் பின்நிற்கப் போவ தில்லை.

இந்த இறுதி நிலையிலாவது பயங் கரவாதப் பாதையை விட்டு,இதயசுத்தியுடனா ன பேச்சுவார்த்தைக்கு வருமாறு விடுதலைப் புலிகளிடம் அரசாங்கம் வேண்டுகோள் விடுக்கின்றது. பயங்கரவாதத்தை விட்டொழித்து, நிரந்தரத் தீர்வொன்றை காண்பதற்காக மீண்டும் பேச்சுவார்த்தைக்குத் திரும்புமாறு புலிகளை சர்வதேச சமூகம் அழுத்தம் கொடுக்க வேண்டும்எனவும் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# சந்தேக நபர்களை 5ஆம் திகதி அடையாள அணிவகுப்புக்கு உத்தரவு

வவுனியா தாண்டிக்குளம் ஏ-9 வீதியில் அரசாங்க விவசாய கல்லூரிக்கு எதிரில் கடந்த மாதம் 18ஆம் திகதி சனிக்கிழமை இராணுவ ட்ரக் வண்டி மீது நடத்தப்பட்ட கிளைமோர் கண்ணிவெடி தாக்குதலில் 5 இராணுவத்தினர் கொல்லப்பட்டு 2 இராணுவத்தினர் காயமடைந்த சம்பவம் மற்றும் அதனைத் தொடர்ந்து இடம் பெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் விவசாய கல்லூரி மாணவர்கள் 5 பேர் கொல்லப்பட்டு 12 பேர் காயமடைந்த சம்பவம் ஆகியவை தொடர்பான இரண்டு வெவ் வேறு மரண விசாரணைகள் வவுனியா மாவட்ட நீதிமன்றில் மாவட்ட நீதிபதி எம். இளஞ்செழியன் முன்னிலையில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

இரண்டு அதிகாரிகள் உட்பட 5 இராணுவத்தினர் கிளைமோர் கண்ணிவெடி தாக்குதலில் கொல்லப்பட்டமை கொலை எனத் தீர்ப்பளித்துள்ள வவுனியா மாவட்ட நீதிபதி இந்தத் தாக்குதலைத் தொடர்ந்து அரசாங்க விவசாய கல்லூரி மாணவர்கள் 5பேர் கொலை செய்யப்பட்டமை தொடர்பான மரணவிசாரணையில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ள பொலிஸ் மற்றும் இராணுவ சந்தேக நபர்களுக்கான அடையாள அணிவகுப்பை எதிர்வரும் 5ஆம் திகதி நடத்துமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார். (ச)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 02.12.2006 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.